அக்கரைப்பற்று பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்

---

# 1. நிதிக்கூற்றுகள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 15 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 21 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்தெம்பர் 21 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அக்கரைப்பற்று பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

## 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் ஏசியா பவுண்டேசன் மூலம் அன்பளிப்புச் செய்யப்பட்ட 57 நூலக புத்தகங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற்றுக்கொள்ள வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 347,601 கணக்குகளுக்கு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 82,500 பெறுமதியான உபகரணங்கள் மற்றும் புத்தகங்கள் கணக்குகளுக்கு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 74,574 தொகை மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்படவில்லை.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள் மற்றும் விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் IX இன் பிரிவு 180 | பணம், களஞ்சியப் பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் ஏனைய கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் மாகாண திறைசேரியின் பணிப்பாளருக்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் ஓவ்வொரு காலாண்டு இறுதியிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் X இன் பிரிவு 191 | மீளாய்வாண்டில் பதின்மூன்று சபைக் கூட்டங்கள் நடைபெற்றிருந்த போதிலும், அக்கூட்ட அறிக்கைகளின் உறுதிப்படுத்திய பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) அத்தியாயம் X இன் பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (v) அத்தியாயம் X இன் பிரிவு 217 | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

1.3.4 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2010 ஆம் ஆண்டுவரை அக்கரைப்பற்று பிரதேச சபையாகச் செயற்பட்டு வந்த இப்பிரதேச சபை 2011 ஆம் ஆண்டிலிருந்து அக்கரைப்பற்று பிரதேச சபை மற்றும் அக்கரைப்பற்று மாநகர சபை என இரண்டு நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டு சொத்துக்களும், பொறுப்புக்களும் இரண்டு சபைகளுக்கும் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டன. எனினும் இவ்வாறு பிரிக்கப்பட்ட சொத்துக்களும் பொறுப்புகளும் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வந்தபோதிலும் 2013 ஆம் ஆண்டு மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 25,808,155.14 கூட்டு மொத்தமான சொத்துக்களும் ரூபா 2,398,774.79 கூட்டு மொத்தமான பொறுப்புக்களும் கணக்குகளிலிருந்து குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சொத்துக்களும் பொறுப்புக்களும் குறைக்கப்பட்டதற்கு உரியாரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

குறைக்கப்பட்ட சொத்துக்களில் ரூபா 48,375 கூட்டு மொத்தமான வங்கியில் நிலையான மற்றும் நடைமுறை வைப்புக்களில் வைப்புச் செய்யப்பட்ட பணமும் உறுதிப்படுத்துவதற்கு போதிய சான்றுகள் கணக்காய்வுக்குப் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் படி 2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 619,658 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 472,393 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 147,265 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு இறுதிவரை வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவீடு செய்வதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 தனியார் வாகனத் தரிப்பிடக் குத்தகை

மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 10,000 தொகையான தனியார் வாகனத் தரிப்பிடக் குத்தகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 விளம்பரப் பதாதைகளுக்கும் மற்றும் தொலைத்தொடர்பு கோபுரங்களுக்குமான கட்டண அறவீடு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்கமைய சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளைசட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 03 விளம்பரப் பதாதைகளுக்காகவும் தொலைத் தொடர்பு நிறுவனங்களால் நிறுவப்பட்ட 02 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காகவும் மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய கட்டணம் ரூபா 60,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சச்சரவுத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

(அ) சபைக்குரிய கெப் ரக வாகனம் 2014 மார்ச் மாதம் ரூபா 58,395 தொகைக்கு திருத்தம் செய்யப்பட்டு திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னரே அத்திருத்த வேலை தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதி, கேள்விச்சபைத் தீர்மானம் என்பன பெறப்பட்டிருந்தன.

(ஆ) வீதிகளைப் புனரமைத்தல், மலசலகூடத்தை அமைத்தல், பொதுக்கிணறுகளை நிர்மாணித்தல் போன்ற அத்தியாவசிய தேவைகளை மக்களுக்கு வழங்குவதற்கு சபையிடம் போதிய நிதி வசதி இல்லாதிருக்கையில் மீளாய்வாண்டில் நடைபெற்ற ஒரு கட்டிடத் திறப்பு விழாவிற்கு ரூபா 418,520 பணம் சபை நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூபா 148,800 தொகை மேடை அலங்காரம் மற்றும் தோரணத்திற்காக செலவு செய்யப்பட்ட பணமாகும்.

3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டம்

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா 4,000,000 தொகை மீளாய்வாண்டின் போது பிரதேச சபைக்கு வழங்கப்பட்டு அதில் ரூபா 2,440,087 தொகை மலசலகூடம் நிர்மாணித்தல், வீதிகளைப் புனரமைத்தல் போன்ற தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் 01/2014ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் மேற்கூறிய வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கு பிரதேச சபைகளின் இயந்திரங்கள் பயன்படுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு சபைக்குச் சொந்தமாக இயந்திரங்கள் இல்லையாயின் அவ்வியந்திரங்களை அண்மையிலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொண்டு வேலைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறப்பட்ட போதிலும் அவ்வாறு மேற்கெள்ளப்படாது சனசமூக நிலையங்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டன. அவை தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றது.

| வேலை விபரம் | சங்கத்தின் பெயர் | ஒப்பந்தத் தொகை<br>ரூபா |
|---|---|---|
| பொது மலசல கூடம் | பட்டியடிபிட்டி சனசமூக நிலையம் | 360,000 |
| மையவாடி | ஆம்மாற் சனசமூக நிலையம் | 780,000 |
| வீதி நிர்மாணம் | ஆம்மாற் சனசமூக நிலையம் | 300,000 |
| பொது மலசல கூடம் | ஆம்மாற் சனசமூக நிலையம் | 122,830 |
| வீதி நிர்மாணம் | லீனா சனசமூக நிலையம் | 635,379 |

(ஆ) மேற்படி சுற்றுநிருபத்துக்கு அமைய இந்நிதியை புதிய வேலைத் திட்டங்களுக்கு பயன்படுத்தாது தற்போதுள்ள அடிப்படை வசதிகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தலுக்காகவே பயன்படுத்த வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் புதிதாக மலசல கூடங்களை நிர்மாணிப்பதற்காகப் இந்நிதி பயன்படுத்தப்பட்டிருந்தது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------

கீழ்வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) வருமானச் சேகரிப்பு
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்